**வனபரிபாலனத் திணைக்கள நிதியம் - 2013**

-----------------------------------------------------------------------------

வனபரிபாலனத் திணைக்கள நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு வனபரிபாலன கட்டளைச் சட்டத்தின் (451 ஆம் அத்தியாயம்) 64 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் 10- ஊ ஆம் இலக்க கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

--------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வனபரிபாலனத் திணைக்கள நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 1,143,608 தொகையான தண்டப் பணம் மீளாய்வாண்டில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு மாத முடிவிலும் வனக் குற்றங்கள் தொடர்பாக நீதிமன்றங்களில் தீர்த்துவைக்கப்படும் வழக்குகளுக்குரிய, வெகுமதி நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய வருமானம் சம்பந்தமான தகவல்கள் வலய அலுவலகங்களிலிருந்து பெறப்படாது, 33 நீதிமன்றங்களிலிருந்து நேரடியாகப் பெறப்பட்டு வருடாந்த வருமான நிலுவை அறிக்கைகளின் அடிப்படையில் நீதிமன்ற தண்டப்பண நிலுவை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 10,282,541 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 14,946,455 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நிதி விளைவுகளில் ரூபா 4,663,914 குறைவாக இருந்தது. நீதிமன்றத் தண்டப் பணக் கிடைப்பனவை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டில் ரூபா 3,404,321 இனால் குறைவடைந்தமையால் ஒட்டுமொத்த கிடைப்பனவுகள் 9 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் பரிசு வழங்கல் மீளாய்வாண்டின் போது ரூபா 1,081,661 இனால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் 31 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

**3.2 பகுப்பாய்வுடனான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டிற்காக நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 23,107,348 கிடைத்திருந்ததுடன் அது 2012 ஆம் ஆண்டிற்காகக் கிடைத்த ரூபா 1,687,626 தொகையையும் உள்ளடக்கியிருந்தது. அந்த தண்டப்பணத்தில் 2013 ஆம் ஆண்டிற்காக கிடைக்கவேண்டிய ரூபா 2,587,299 தொகையைச் சீராக்கியதன் பின்னர் மீளாய்வாண்டிற்காகக் கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய தண்டப் பணம் ரூபா 24,007,021 ஆகும். அது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீத வீழ்ச்சியாகும்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நீதிமன்றத்தால் அறவிடப்பட்ட தண்டப்பணம் வன நிதியத்தில் செலவு வைக்கப்படுவதில் தாமதம் நிலவியதுடன் ஆண்டின் ஒவ்வொரு மாதத்திற்காகவும் பெறப்படவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் சரியாக இனங்காணப்பட்டு அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் முறையொன்று கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வனக்குற்ற வழக்குகள் முடிவடைந்தபோதும் அவ்வாறான வனக் குற்றங்களைத் தவிர்ப்பதற்கு உதவிய உத்தியோகத்தர்கள் அன்பளிப்பைக் கோருவதும் கோரப்பட்ட அன்பளிப்பு வழங்கப்படுவதில் தாமதத்தைத் தவிர்த்துக் கொள்வதற்குமான ஒழுங்கான முறையொன்று கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

2013 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சட்டத்தை அமுலாக்குகையில் பணியாற்றும் வன உத்தியோகத்தர்களது பணியை மெச்சி நலன்களை வழங்குவதற்காக நிறுவப்பட்ட நிதியத்திலிருந்து வழங்கப்படும் பரிசுத்தொகை செலவினக் கட்டுப்பாட்டின் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய செலவினமல்லாத போதிலும், அன்பளிப்பு வழங்கல்களின் மதிப்பீட்டிற்கு ஒப்பாக சேமிப்புக்களுக்கான காரணமாக ஒழுங்குமுறையான செலவின நிருவாகம் எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நீதிமன்ற பிரயாணச் செலவின மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 4,000,000 ஆக இருந்ததுடன் அதில் 26 சதவீத சேமிப்பு அவதானிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் போதும் 31 சதவீத சேமிப்பு அவதானிக்கப்பட்டதுடன் இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் சேமிப்புக்களுக்கான காரணமாக ஒழுங்கு முறையான செலவின நிருவாகம் எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது வனபரிபாலன நாயகத்திற்குத் தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) கணக்கீடு
(இ) வருமானச் சேகரிப்பு
(ஈ) பணம் கணக்கிலிடல்
(உ) நிலுவை வருமானத்தைக் கணக்கு வைத்தல்